ஸ்ரீ ராமஜெயம்.

பெருமாள் தாலாட்டு என்கிற

# ஸ்ரீ ராமர் தாலாட்டு.

## ஸ்ரீரங்கநாயகர் திருஊசல்.



கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1914

17-18 காளத்தியப்ப முதலி வீதி மதராஸ் என். சி.

ஸ்ரீ

# ஸ்ரீ ராமர் தாலாட்டு.

பேராமயோத்திப் பெருமாளைத்தாலாட்டச்
சீரார்குருகையர்கோன் சேவடிகள்காப்பாமே. ௧

அன்றமர்க்காக அயோத்தியெனும்பட்டணத்திற்
சென்றவதரித்தத் திருமாலைச்சொன்னாரோ ௨

தெள்ளுதமிழ்கொண்டாடச் சீரார்தசரதற்குப்
பிள்ளைவிடாய்தீர்த்த பெருமாளைச்சொன்னாரோ. ௩

காவலழியக் கருதிலங்கைத்தானறிய
மூவருடன்பிறந்து மூவுலகையாண்டாரோ. ௪

கருதலர்கள்காவலனே கண்ணார்ந்தகற்பகமோ
அரியுடையதாயார்க்குப் பாற்குடமாய்நின்றானே. ௫

வீராதிவீரனே வேந்தர்சூடாமணியோ
சீராமனென்னுந் திருநாமம்பெற்றானே. ௬

பேராற்பெரியவனே பேருலகையாண்டவனே
சீரார்சிறப்புடைய செங்கண்முகின்மேனியனே ௭

குவலயத்தோர்கொண்டாடக் குடுமிப்பிராயத்தோ
தவமுனிவன்சொற்கேட்டு தாடகையையெய்தவனே.

மாசிலாமுத்தோ மணிவயிரத்தோளானே
கோசிகனார்வேள்விக் குறைதவிர்த்தகாவலனே. ௮

அரியகுடிக்கரசேர் வாடவர்க்குப்போரேரோ
பெரியதொருசிலையைப் பெண்வடிவைசெய்தவனே. கo
அலைகடல்சூழ்வையகத்தே யாருமசைக்கவொண்ணாச்
சிலையைவளையக்குனித்துச் சீதைமணஞ்செய்தவனே.
தாய்கைகேசிசொற்படிக்குத் தாமமுடிசூடாமல்
சீதையுடன்கானகத்தே சென்றபெருமாளோ கஉ
தாமமணிமார்பனே தம்பிதுணையுள்ளவனே
மாமுனிவர்க்கெல்லா மனக்கவலைதீர்த்தவனே கங
தாக்குடனேபேசுந் தனக்கடங்காசூர்ப்பநகை
மூக்கரிந்தசேவகர்க்கு முன்புகந்தசேவகனே கச
தன்மாயைக்காட்டித் தையலுளமாலாக்கும்
பொன்மானின்பின்போன புண்ணியனைச்சொன்னாரோ
அக்கானகத்தே யணிமயிலைத்தேடுதற்குச்
சுக்ரீவன்தன்னுடனே தோழமையைக்கொண்டானே.
கோலமதக்களிறே கொற்றவர்தம்பேரேறே
வாலிதனைக்கொல்லவொரு வாளிசெய்தசேவகனே. கஎ
ஆழிகொடுத்தே யனுமானைத் தூதனுப்பி
வாழுமிலங்கைநகர் வழிபார்த்துநின்றவனே. கஅ
இருட்கடலைத்தாண்டி யிலங்கைநகர்தீமூட்டித்
திரும்பியனுமானுரைக்கச் சீதைசெயல்கேட்டவனே.()
வானரங்களொன்னு மகாசேனைதன்னுடனே
தானிலங்கைவேரறுக்கத் தண்டெடுத்தசேவகனே. உo

அடல்பெரியவீரியனே வன்புகுடிகொண்டவனே
கடல்கலங்கமுன்னாள் கணைதொடுத்தசேவகனே. உக

துலங்கும்பெருங்கடலைத் தூர்த்தேறியப்புறம்போய்
இலங்கைநகர்கண்ட விராகவனைச்சொன்னாரோ. உஉ

கொக்கரித்துவானரங்கள் கூத்தாடவெத்திசையும்
அக்கடலைப்பின்னிட் டரக்கர்பதிபுக்கவனே. உங

குன்றுபோல்வந்த கொடியதொருராவணனை
இன்றுபோய்நாளைவா வென்றபெருமாளோ. உச

நாடியரக்கர்பதி நாலாயிரவெள்ளத்துடன்
கூடிவருமராவணனைக் கொன்றபெருமாளோ. உரு

பத்துமணிமுடியும் பத்திரண்டுதிண்டோளும்
தத்திவிழவெய்த தடம்பெரியசேவகனே உசா

எட்டிலங்கையைச்சுட் டிலக்குமியைத்தான்மீட்டுச்
சட்டமுடையயோத்திநகர் சார்ந்தரகுராமனே. உஎ

பூண்டமணித்தேரும் பொன்னிலங்கைமாநகரும்
மீண்டுமவன்றம்பி விபீஷணருக்கீந்தவனே. உஅ

ஸ்ரீராமராமனே சீதைசிறைமீட்டவனே
பேரார்பெரியவனே பேருலகையாண்டவனே. உகூ

செப்பமுடன்சேர்த்தெடுத்த ஸ்ரீராமன்தாலாட்டை
முப்பதுங்கற்றவர்கள் மூவுலகையாள்வாரே. ௩0

ஸ்ரீராமர்தாலாட்டு முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

## ஸ்ரீ ரங்கநாயகர்

# திருஊசல்.

—(*)—

தார்சிறந்தமுத்ததினாற் கால்கணாட்டி
தனிப்பவளக்கொம்பதினாற் கொடுங்கைமாட்டி
வார்சிறந்தவைரத்தாற் பலகைபூட்டி
வண்ணநவமணிமாலை வயங்கச்சூட்டி
ஏர்சிறந்தசித்திரங்க ளெங்குந்தீட்டி
இலகுதிருப்பொன்னூசல் சேர்வைகாட்டி
சீர்சிறந்தமாதவனா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனா ராடிரூசல். (௧)

வச்சிரமணிதங்கத்தாற் கால்கணாட்டி
வைரங்கோமேதகத்தாற் பலகைபூட்டி
பச்சையெனுமரகதத்தாற் கொடுங்கைநாட்டி
பசும்பொன்னின்சங்கிலியால் வடங்கள்பூட்டி
உச்சிதமாய்வானவர்கள் சமைத்தவூசல்
உலகளந்தமாயவனா ருண்மையாக
செச்சையணிமாயவனா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனா ராடிரூசல். (௨)

மாமறையைநவமணியாய்க் கால்களாக்கி
வழுத்துமறுசாத்திரத்தைப் பலகையாக்கி
தூமருவும்புராணமதைக் கொடுங்கையாக்கி
சொல்லரியபலகலையைச் சங்கிலிகளாக்கி

பூமகளுநிலமகளும் பொற்பாயோங்க
பொன்னுலகோர்செய்தளித்த பொன்னினூசல்
தேமருவும்வண்டுளப மாலைபூண்ட
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். (௩)

அணியணியாய்த்தேவர்கள்வந் தடிகொண்டாட
அந்தரர்கின்னரர்கருட ரணிந்துபாட
கணிகையர்கள்கொலுமுகத்திற் களித்தேயாட
கன்னியர்களிருமருங்குங் கவரிபோட
பணிவுடனேமுனிவரெல்லாம் பரிந்துதேட
பன்னிருவராழ்வார்கள் பதத்தினுட
திணிவுபெருந்திருமார்பா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். (௪)

மாமறையோர்மாமுனியோர் வருந்திப்போற்ற
வானவர்கள்பூமாரி மகிழ்ந்துதூற்ற
சேமமுடனெம்மரகஞ் சிறக்கச்சாற்ற
தெரிவையர்கள் திருவாலஞ்சிறந்துமாற்றப்
பூமகளும்பார்மகளு மருங்கில்வாழ்க
பொன்னடியிலாழ்வார்கள் பொலிந்துதாழ்க
தேமருவுங்காவேரி சிறந்துசூழ
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். (௫)

பொன்னணிந்தநவமணிமா மாலையாட
புகழ்பெரியவண்டுளப மாலைபாட

வன்னமுள்ள சந்திரவட்டக் குடைகளாட
மகரமணிக்கண்டிகையா மாலையாட
மன்னுமணிமுடியாடப் பதக்கமாட
வாகுவலயங்களுமே யோங்கியாட
செந்நெல்விளைவயல்சூழ்ந்து செறிந்தேயோங்கும்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். (௬)
இந்திரரும்வானவரும் வடந்தொட்டாட்ட
இறையவரும்மறையவரும் வடந்தொட்டாட்ட
சந்திரரும்சூரியரும் வடந்தொட்டாட்ட
தானவரும்வானவரும் வடந்தொட்டாட்ட
கொந்தலருங்குழன்மடவார் வடந்தொட்டாட்ட
கோகனகப்பொற்பாதங் குலுங்கியாடச்
சிந்தைமகிழ்ந்திருவரங்க ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். (எ)
சதுர்மறையத்திருடியவன் றன்னைவென்றோன்
தனியிலங்கைராவணனார் தன்னையுங்கொன்றோன்
அதிசயமாய்ப்பாண்டவரைக் காத்தமூர்த்தி
ஆலிலைமேற்பள்ளிக்கொண்ட வாதிமூர்த்தி
கதிரொளியாய்ப்புவியளந்த கருணையாளன்
கன்னியர்கள் துகிலுரிந்த கள்ளமாயன்
சதுரிலகும்ஸ்ரீரங்க ராடிரூசல்
ஜானகிமணாளனே ராடிரூசல். (அ)
சங்கரனுமைங்கரனும் மகிழ்ந்துவாழ்த்த
சதுர்முகனுமறுமுகனுந் தாழ்ந்துபோற்ற

துங்கமுள்ளநவசித்தர் துதித்துப்போற்ற
சொல்லுபதினெண்கணமுந் தொழுதுபோற்ற
எங்குமுள்ளவண்டத்தோ ரேத்திப்போற்ற
ஈராறுமாழ்வார்க ளிணங்கிப்போற்ற
செங்கமலையாளுடனே யாடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். (௯)

மலர்மேவுதிருமகளோர் பக்கமேவ
வாட்டங்கனிலமகளோர் பக்கமேவ
நலமேவுபன்னிரண் டாழ்வார்கள்போற்ற
நாதமுனிமுதலானோர் வணங்கியேத்த
வலமேவுமைம்படைகள் கையிலோங்க
மருமார்பிற்கவஸ்துவா பரணமாடச்
சிலைமேவுமலர்க்கந்தா ராடிரூசல்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல். (௧௦)

இடையினிற்பீதாம்பரந் தானிருந்துமின்ன
எழிற்கரத்திற்பஞ்சவா யுதங்கள்மின்ன
வடிவுபெருந்திருமேனி வண்ணமின்ன
மதிவதனங்கிருபையொடு மகிழ்ந்துமின்ன
முடிதனிலேமுடிமாலை முயங்கிமின்ன
மொழிமார்பிற்கவுஸ்துவா பரணந்துன்ன
திடமேவுங்காவேரி சிறந்துசூழும்
ஸ்ரீரங்கநாயகனு ராடிரூசல் (௧௧)

ஸ்ரீரங்கநாயகர் திருஊசல் முற்றிற்று.